யென்று சொன்னால், அந்தக் கழிவு நீரால் பல கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியில்லாமலும் பயிர் செய்ய முடியாமலும் போகிறது. எனவே குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் எந்த எந்தக் கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனவோ, அந்தந்தக் கிராமங்களுக்கு முன்னுரிமை தந்து, உடனடியாகக் குடிநீர் வழங்கவேணும். இதற்கு இடைக்கால நிவாரணம்போல் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய அரிய யோசனையை இந்த அரசு பரிசீலிக்கும்.

மதுரை அரசு மருத்துவ மனை.

* வினா எண். 456—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரையில் அரசு மருத்துவமனையில் கரானரி யூனிட் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மதுரையில் அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையில் நான்கு படுக்கைகளும், அடிப்படைத் தேவைகளுக்கேற்ற உபகரணங்களையும் கொண்ட கரானரி கேர் யூனிட் ஒன்று ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டு கடந்த ஓராண்டு காலமாக செயல்பட்டு வருகிறது.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: துணைத் தலைவரவர்களே, சென்னையை அடுத்த மாநகராட்சி மதுரை. அங்கு மூளை வியாதிகளுக்கும் விபத்தினால் ஏற்படும் சம்பவத்திற்கும் ஒரு பிரிவு மதுரை ஆஸ்பத்திரியிலே அமைக்கும் உத்தேசம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்: தலைவரவர்களே, மூலக் கேள்வி மதுரையில் அரசு மருத்துவமனையில் கரானரி யூனிட் அமைக்கும் உத்தேசம் உள்ளதா என்பதுதான். மாண்புமிகு உறுப்பினரவர்கள் நியூராலஜி பற்றி இங்கே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், ஏற்கனவே அதைப்பற்றி ஆராய

ஒரு பேராசிரியரும் அங்கே இருக்கிறார். அறுவை சிகிச்சை நிபுணரும் அங்கே இருக்கிறார். எல்லாவிதமான வசதிகளும் அங்கே இருக்கின்றன. விபத்துக்களிலே பாதிக்கப்பட்ட வர்களைப் பராமரிக்கவும் உடனடியாக சிகிச்சை அளிக்கவும் அவசர சிகிச்சைக் கூடமும் இருக்கிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தென் மண்டலப் பகுதியினுடைய தலை நகரான மதுரையில் எர்ஸ்கின் ஆஸ்பத்திரிதான் மிகப் பெரிய ஆஸ்பத்திரி. அப்படிப்பட்ட ஆஸ்பத்திரியில் கரானரி யூனிட் சென்ற ஆண்டுதான் துவக்கப்பட்டிருப்பதாக அமைச்ச ரவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த கரானரி யூனிட்டில் என்னென்ன கருவிகள் தற்பொழுது இருக்கின்றன? மற்ற பெரிய ஆஸ்பத்திரிகளில் புதிய நவீன கருவிகள் இருப்பதைப் போல் இங்கும் அமைக்க இந்த அரசுக்கு ஏதேனும் உத்தேசம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10–50]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டுதான் துவக்கப்பட்டுள்ளது என்று நான் சொல்லவில்லை, செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்றுதான் சொன்னேன். அந்த மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனையில் சிகிச்சைப் பெறுகின்ற இடத்தில் மானிட்டர்ஸ், டைவர்சிபிலேட்டர்ஸ், பேஸ்மேக்கர்ஸ் என்ற உபகரணங்கள், இருதய நோய், நரம்புத் தளர்ச்சி நோய்கள் சம்பந்தமாக இருக்கின்றன என்பதை தெரிவித்துக் கொள் கிறேன்.

*வினா எண். 457— திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை அரசாங்க மருத்துவமனையில் இருதய நோய் சிகிச்சை பிரிவு நல்ல முறையில் அமைக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் என்றால் அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?